III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.No.125/2017 and O.S.No.355/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 29-03-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :Yakesh Krishnan | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk: | |

**1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். தாவா சொத்து எனக்கு சொந்தமானது என விளம்புகை பரிகாரம் உட்பட மற்ற பரிகாரங்கள் கேட்டு அசல் வழக்கு எண்.125/2017 தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் புல எண் 515/3பி மற்றும் 515/4பி. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 15 சென்ட். புல எண்.515/3பி-க்கான விஸ்தீரணம் 8 சென்ட். முதலாவது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்துள்ளேன். அதன் படி புல எண்.515/3பி ன் விஸ்தீரணம் 30 சென்ட். புல எண் 515/3பி ல் 30 சென்ட் இல்லை என்று மறுப்புரை நான் தாக்கல் செயதுள்ளேனா என்றால் தெரியவில்லை. புல எண்.515/3பி ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியாத நிலையில், முதலாம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று நான் கேட்டிருக்கும் பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நில தகராறு காணரமாக முதலாம் பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் எனது பெயரில் முதல் தகவல் அறிப்கை பதிவாகி உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் தான் உள்ளது என்றால் அது ரத்து செய்யப்பட்டாகிவிட்டது. அசல் வழக்கு எண்.125/2017ன் பிராதின் பத்தி 9ல் குறிப்பிட்டுள்ள படி பட்டா 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெயரில் 2015ஆம் வருடம் பட்டா பதிவாகியுள்ளதாக தெரிவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி அந்த சொத்து மாதேஷ் குமார், ஆன்ந்த் குமார் மற்றும் ரம்யா ஆகியயோரின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து காலியிடம். வழக்கில் தாவா சொத்து குத்தைக்கு விடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுள்ளது என்றால் சரிதான். அது

சம்பந்தமான மற்ற விவரங்கள் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த இடத்தை நான் குத்தகைக்கு விடவில்லை என்றால் சரியல்ல. 6வது பிரதிவாதி நாகராஜ் 5வது பிரதிவாதி குபேந்திரனின் பவர் ஏஜென்ட். குபேந்திரன் நாகராஜுக்கு பொது அதிகார பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார். அந்த பொது அதிகார பத்திரம் செல்லாது என்று நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் தெரியவில்லை. ஆதலால் பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரங்கள் சட்டப்படி செல்லக்கத்தது என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்து செட்டில்மென்ட் பத்திரம் மூலம் கிடைத்தது. எனக்கு எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மென்ட் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)